வேண்டுமெனக் கோரினுர். அவர் சிங்களவருக்கு 50 ஆசனங்களும் ஏனைய எல்லாச் சமுதாயத்தினருக்கும் 50 ஆசனங்களும் வேண்டுமெனக் கேட்டார். இக்கோரிக்கை மறுக்கப்பட்டது. 1930 ஆம் தொடர் ஆண்டுகளிலும் இலங்கை சுதந்திரம் பெறும் வரையிலும், சட்டசபையில் முறையான சிங்கள, தமிழ் விகிதம் இருப்பது பற்றிய பிரச்சினை இந்த நாட்டில் மையமான அரசியல் வாதமாக இருந்து வந்தது.

1939 — 1945 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகப் போர் காரணமாக இச்சச்சரவுகள் உயிரற்றுப் போயிருந்தன. 1936 இல் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க சபை 1947 ஆம் ஆண்டு வரைக்கும் தொடர்ந்து செயற்பட்டது. திரு. பொன்னம்பலம் தமது தமிழ்க் காங்கிரசை நிறுவி, சோல்பரி ஆணைக்குழுவினர் முன்னிலையில் 1944 இல் "ஐம்பதுக்கு ஐம்பது" கோரிக்கையை வலியுறுத்தினுர் ; அது மீண்டும் மறுக்கப்பட்டது. சோல்பரி அரசியலமைப்பு 1945 நவம்பரில் அரசாங்க சபையில் 51 வாக்குகள் சாதகமாகவும் 3 வாக்குகள் பாதகமாகவும் பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசாங்க சபையின் தலைவரான திரு. டீ. எஸ். சேனநாயக்க, "காங்கிரசின் கோரிக்கையை வலியுறுத்தினுர் ; அது மீண்டும் மறுக்கப்பட்டு சிறுபான்மைச் சமூகத்தினர் தமக்கு எவ்வகையான தீங்கும் ஏற்படுமென அச்சங்கொள்ள வேண்டிய அவசியமில்லை எனும் உண்மையான உறுதிப்பாட்டை அச்சமூகத்தினருக்கு அளிக்கின்றேன்" என்று தமிழர்களுக்கு உறுதி கூறினுர். இலங்கைத் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் சோல்பரி அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வதற்கு வாக்களித்தனர். இரண்டு இந்தியத் தமிழரும் ஒரு சிங்களவரும் — அதாவது திரு. தகநாயக்கவும் எதிர்த்து வாக்களித்தனர். நானும் அவ்வமயம் அச்சபையில் இருந்து இப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தேன். அந்தச் சபையைச் சேர்ந்த திரு. தகநாயக்கவும் நானுமே இன்று இப் பாராளுமன்றத்தில் இருக்கின்றேம்.

சோல்பரி அரசியலமைப்பு 1947 யூலையில் புகுத்தப்பட்டது. அதே ஆண்டில் செப்டம்பர் மாதம் தேர்தல்கள் நடைபெற்றன. ஐக்கிய தேசியக் கட்சி எல்லா சமூகத்தவர்களையும் உள்ளடக்கியிருந்ததுடன், பல கட்சிகளையும் அதாவது முக்கியமாகக் காங்கிரஸ், சிங்கள மகா சபை, முஸ்லிம் லீக், பின்னர் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையும் கொண்டமைந்திருந்தது.

1948 பெப்ருவரி 4 ஆந் தேதி பொருத்தமான திருத்தங்களுடன் கூடிய சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இலங்கை சுதந்திர நாடாகியது.

1956 ஆம் ஆண்டு வரைக்கும் ஆங்கிலத்திற்குப் பதிலாகச் சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக இருக்க வேண்டுமென்பதை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருந்தன. அரசாங்க சபையில் 1932 யில் திரு. ஜீ. கே. டபிள்யூ. பெரேரா, 1937 இல் திரு. பிலிப் குணவர்த்தன, 1944 இல் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகியோர் தீர்மானங்களைப் பிரேரித்திருந்தனர். 1946 இல் என் தலைமையில் அரசாங்க சபைத் தெரிவுக் குழுவொன்று சிங்களமும் தமிழும் எவ்வாறு அரசகரும மொழிகளாக்கப்பட வேண்டும் என்பது பற்றி அறிக்கையிட்டது.



1949 இல் இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதால், இப்பிரசைகளிற் பெருந் தொகையானேர் தம் குடியியல் உரிமைகளை இழந்தனர். தமிழ்க் காங்கிரஸ் பிளவுபட்டது. திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகம் 1949 இல் சமஷ்டிக் கட்சியை நிறுவினுர். 1951 இல் நடைபெற்ற அதனுடைய முதலாவது ஆண்டுப் பேரவைக் கூட்டத்திலே தமிழ் அரசியல்வாதிகள் தமிழரை ஒரு தனிப்பட்ட இனமாக வரையறுத்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுமே பிளவுபட்டது. திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க 1951 செப்டம்பரில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை (ஸ்ரீ ல. சு. க.) நிறுவினுர். அக்கட்சியினர் சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழிகளாக ஏற்றுக்கொண்டதுடன், அரசாங்க நிருவாகம் சிங்களத்திலும் தமிழிலும் நடாத்தப்படவேண்டுமென்றும் கூறினர்.

1955 டிசெம்பரில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி "சிங்களம் மட்டும்" அரசகரும மொழியெனத் தனது மொழிக் கொள்கையை மாற்றியமைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி 1956 பெப்ருவரியில் அதே கொள்கையைப் பின்பற்றியது. 1956 மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ. தே. க. தோற்கடிக்கப்பட்டது. திரு. பண்டாரநாயக்க தலைமையாக அமைந்த மக்கள் ஐக்கிய முன்னனி (எம். ஈ. பீ.) என்னும் ஒரு தேர்தல் முன்னணி, தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தது.

1956 யூன் மாதம் 5 ஆம் தேதி. "சிங்களம் மட்டும்" சட்டமூலம் புகுத்தப்பட்டது. காலி முகத்திடலில் சமஷ்டிக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்தபோது, முதலாவது சிங்கள — தமிழ் கலவரங்கள் தோன்றின. பெருந் தொகையான தமிழர்கள் கொல்லப்பட்டனர் ; வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சொத்துடைமைகள் அழிக்கப்பட்டன. இதுவே சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே நடைபெற்ற முதலாவது கலவரமாகும். இவ்வாருன கலவரங்கள் மீளவும் 1958 ஆம், 1977 ஆம், 1981 ஆம், 1983 ஆம் ஆண்டுளில் இடம் பெற்றன.

தமிழர்களின் கோரிக்கைகளை வழங்குவதற்காக, பிரதம அமைச்சர் பண்டாரநாயக்க 1957 ஏப்ரலில் தமிழின் நியாயமான உபயோகம் பற்றிய சட்டமூலத்தைப் புகுத்தியதுடன், 1957 யூலையில் பண்டாரநாயக்க — செல்வநாயகம் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தம் பிரதேச சபைகள் நிறுவப்படுவதை ஒப்புக்கொண்டதுடன், மாகாண எல்லைகளுக்கு அப்பால் அச்சபைகள் இணைந்து கொள்வதையும் அனுமதித்தது. பின்னர் அவர் இவ்வொப்பந்தத்தை நிராகரித்தார்.

1965 மாச் மாதத்தில் திரு. டட்லி சேனுநாயக்க திரு. செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தைச் செய்து, அதிற் கையெழுத்திட்டார். அதுவும் அமுலாக்கப்படவில்லை.

1960 — 1965 ஆம் ஆண்டுக் காலத்தில் பிரதம அமைச்சராகவிருந்த திருமதி பண்டாரநாயக்க, முதலாவதாக யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தை அனுப்பி, அதனை முற்றுகையிட்டார். அவர் அது பற்றி சமஷ்டிக் கட்சியுடன் தானும் கலந்துரையாடவில்லை.

6–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு தனியான அரசு பற்றிய எண்ணம் முதலாவதாக 1960 இல் வெளிகாட்டப் பட்டது. பின்னர் 1964 ஆம் 1975 ஆம் ஆண்டுகளிலும் அக்கருத்து வெளியிடப்பட்டது. 1977 இல் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி (த. ஐ. வி. மு.) பிரிந்து செல்வதைத் தமிழ் மக்களின் இலட்சியமாகக் கொண்டு நிறுவப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர முதல்வரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினருமான திரு. துரையப்பா கொலை செய்யப்பட்டதன் வழி, 1975 இல் முதலாவது பயங்கரவாதச் செயல் இடம் பெற்றது. அது முதல் ஐ. தே. க., ஸ்ரீ ல. சு. க. ஆகியவற்றைச் சேர்ந்த 13 உறுப்பினர்களையும், படைக்கலச் சேவைகளையும் பொலிசுச் சேவையையும் சேர்ந்த உறுப்பினர்களையும் பயங்கரவாதிகள் கொலை செய்துள்ளனர் ; தேர்தற் கூட்டங்களிலும் வாக்கெடுப்பு நிலையங்களிலும் குழப்பம் விளைவித்துள்ளனர் ; வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களில் பல பகுதிகளிலே பற்பல கொலைச் செயல்களைப் புரிந்துள்ளனர்.

1983 யூலை 24 ஆந் தேதியிலிருந்து தொடங்கிய துரதிஷ்டமான கலவரங்கள், யூலை 23 ஆந் தேதி யாழ்ப்பாணக் குடாநாட்டிலே 13 இராணுவச் சேவையினர் கொலை செய்யப்பட்டதன் நேரடியான விளைவாகும்.

1983 யூலை 20 ஆந் தேதி அனைத்துக் கட்சிகள் மாநாடு ஒன்றுக்கு அழைப்பு விடுத்தேன். த. ஐ. வி. முன்னணியோ ஸ்ரீ ல. சு. கட்சியோ அதற்கு வராமையால், அதனாற் பயனேற்படவில்லை. யூலை 27 ஆந் தேதியன்று அம்மாநாட்டை மீளக் கூட்டுவிப்பதற்கு முயன்றபோதும், கலவரங்கள், அது நடைபெறமுடியாமல் தடுத்துவிட்டன.

1977 ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் தமிழை அரசியலமைப்பில் தேசிய மொழி ஆக்கியுள்ளது ; பல்கலைக்கழகங்களிற் சேர்வது தொடர்பான விதிகளைத் திருத்தி யமைத்துள்ளது ; அவ்விதிகள் தொடர்பான ஒருதலைச் சார்பான இன வேறு பாட்டை நீக்கியுள்ளது ; மேலும், அரசாங்க சேவைகளிற் சேர்வதும் பதவி உயர்வு பெறுவதும் தொடர்பான இனச் சலுகைகளை விதிக்கின்ற பிரமாணங்களையும் நீக்கியுள்ளது.

மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டு, மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். த. ஐ. வி. மு. அவைகளை ஏற்றுக்கொண்டு இரண்டு வருடங்களாக அவற்றைச் செயற்படுத்தி, தேர்தல்களிற் போட்டியிட்டுள்ளது. அவற்றுக்குப் போதுமான அளவில் அதிகாரங்கள் வழங்கப்படாமையாலும் நிதிகள் ஒதுக்கப் படாமையாலும் த. ஐ. வி. மு. உறுப்பினர்கள் கடந்த வருடம் அச்சபைகளிலிருந்து விலகிக் கொண்டனர்.

இச்சம்பவங்கள் அனைத்தும் யூலை மாதக் கலவரங்களின்போது உக்கிரமான கட்டத்தையடைந்தன. இக்கலவரங்கள் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் இடம்பெறுவிடினும், அவை நடைபெற்ற இடங்களிலெல்லாம் மூர்க்கத்தனமாக இடம்பெற்று, உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் அழிவையேற்படுத்தின.



உலகம் அனைத்தும் முற்றாக அறிந்து கொள்ளக்கூடிய வகையில் யூலை மாதக் கலவரங்கள் நடைபெற்றன. தொலைக்காட்சியும், வானொலிப்பெட்டியும், அச்சுலகும், சர்வதேச பொதுசனத் தொடர்புச் சாதனங்களும் இங்கு நடைபெற்றவை பற்றிய உண்மையானவையையும் பொய்யானவையையும்; நமக்குச் சாதகமானவையையும் பாதகமானவையையும் பரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

இந்தியா, குறிப்பாகத் தமிழ்நாடு இக்கலவரங்கள் பற்றி விசேட அக்கறை காட்டியது. அந்நாட்டின் உள்ளூர் அரசியல் முக்கியமான பங்கையாற்றியது. அபிருத்தியடைந்த நாடுகளிலுள்ள தமிழ் மக்கள், தனியாகப் பிரிந்து செல்தல் பற்றிய பிரச்சனையையும் பயங்கரவாத இயக்கம் பற்றிய விடயத்தையும் ஒதுக்கி வைத்து, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மனித உரிமைகள் மீறப்படுவதன் அடிப்படையில் வெளிநாட்டு உதவியை நிறுத்தி விடும்படி கேட்டு இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகத் தமது பிரசாரங்களை மேற்கொண்டனர்.

யூலை மாதம் நடைபெற்றவற்றினால் எழும் சர்வதேச விளைவுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் தனது கண்களை மூடி காதுகளைத் தாழிட்டுக் கொண்டிருக்க முடியாது.

நாட்டில் நிலவும் இனப் பிரச்சனைக்கு நெறிமுறையான தீர்வு காண்பதன் அவசியத்தை ஏற்றுக்கொள்ளும் நாம், அதேவேளையில் பகைமையோ வன்செயல் களோ ஏற்படும் அளவில் அப்பிரச்சனை வளர்வதற்கு இடமளிக்க முடியாது.

இப்பொழுது கூட்டப்பட்டிருக்கும் அனைத்துக் கட்சிகள் மாநாடு, அங்கு பிரதிநிதித்துவம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகக் கூடி, நெருக்கடி நிலையைத் தளர்த்துவதற்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்குமான வழிவகை களைப் பற்றி அமைதியாகக் கலந்துரையாடுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கி யுள்ளது.

பயங்கரவாத இயக்கப் போராட்டம் உடன்பாடு ஏற்படுவதைக் கடினமாக்கி யுள்ளதென நான் கருதுகின்றேன். அவ்வியக்கத்தினர் ஒரு தீர்வினை விரும்புகிறார் களா என்பதனை அறிய அவாக்கொண்டுள்ளேன். ஒரு தீர்வினைக் காண்பதால் பயங்கரவாதம் அற்றுப்போய்விடும் என்று சிலர் எண்ணுகிறார்கள். வேறு சிலர், பயங்கரவாதம் முதலில் நீக்கப்பட்டாலொழிய எந்த ஒரு தீர்வைக் காண்பதும் சாத்தியமாகாது என்று கருதுகிறார்கள்.

துப்பாக்கிக் குண்டுகள் மூலம் தனியாகப் பிரிந்து செல்வதற்கு முயலும் அதிதீவிரவாதிகளை வடக்கிலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் திருப்திப்படுத்த வேண்டிய வர்களாக இருக்கிறார்கள். தாங்கள் ஏற்றுக்கொள்வதும் ஏனையோர் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தாங்கள் விரும்புவதுமான ஒரு தீர்வு, இயன்றவரையில், ஓர் ஐக்கிய இலங்கையினுள் பிரிந்திருத்தல் முறைமைக்கு நெருங்கியதொன்று என்பதனை அப்பிரதிநிதிகள் அதிதீவிரவாதிகளுக்கு உணர்த்துதல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற்ருெரு புறம், சிங்களம், முஸ்லிம் மக்களுடைய தலைவர்கள், தாங்கள் முன்வைத்துள்ள பிரேரணைகள், இயன்றவரையில், பிரிந்து செல்லும் முறைமையி னின்றும் எவ்வாறு பெரிதும் தூரமானவை என்பதனை அம்மக்களுக்கு விளக்குதல் வேண்டும். இவ்விரு நிலைமைகளுக்குமிடையே ஏறக்குறைய இணைக்க முடியாத ஓர் இடைவெளி இருக்கின்றது. அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்கள் சரியான முடிவுகளை மேற்கொள்வதற்கான தைரியத்தையும் ஞானத்தையும் பொறுமையை யும் பெறுவார்களாக.

## 1985 பெப்புருவரி 20 ஆம் தேதி சனுதிபதி அவர்கள் பாராளுமன்றத்திற்கு ஆற்றிய உரையின் பிரித்தெடுப்பு

1984 சனவரியில் ஆரம்பித்த அனைத்துக்கட்சி மாநாட்டின் நடவடிக்கைகளை கௌரவ உறுப்பினர்கள் அறிந்துள்ளனர்.

1984 டிசெம்பர் 21 ஆந் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற முழுமொத்தமான கூட்டத் தொடரின் கடைசிக் கூட்டம் வரையிலான மாநாட்டு உத்தியோக பூர்வமான நடவடிக்கைகள் தொடர்பான சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் பற்றி உறுப்பினர்கள் அறிந்து கொள்வதற்காக நான் உங்கள் முன் வைக்கின் றேன்.

1984 டிசெம்பர் 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டின் முழு நிறைவான கூட்டத்தொடரிலே, அனைத்துக்கட்சி மாநாட்டின் தவிசாளர் எனும் வகையில், பிரேரணைகளை விளக்கும் ஓர் அறிக்கையை நான் செய்தேன். இவை பின்வரும் தாபனங்களுடனும் கூட்டத்தாருடனும் கலந்துரை யாடல்கள் செய்ததன் விளைவாக எழுந்தவையாகும் : அனைத்துக் கட்சி மாநாட்டுக் கூட்டங்கள், பேராளர் குழுக்களின் தலைவர்களுடைய கூட்டங்கள், அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சிகள், மாநாட்டுக்கு உதவிய வழக்கறிஞர்கள், அமைச்சர் களுடன் நடத்திய தனிப்பட்ட முறையான கலந்துரையாடல்கள் ஆதியன. அனைத்துக் கட்சி மாநாட்டிலடங்கிய பேராளர் குழுக்களுட் பெரும்பாலானவர்களின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இப்பிரேரணைகள் சட்டவரைவு வடிவத்தில் அமைக்கப்பட்டு, கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்டதுடன், பேராளர் குழுக்களின் "ஆழ்ந்த கவனமுள்ள ஆராய்ச்சியுடைய கவனத்திற்கும்" ஒப்படைக் கப்பட்டன. 1984 டிசெம்பர் 14 ஆந் தேதி நான் செய்த அறிக்கை இவண் முன்வைக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் கட்சி மாநாட்டின் முழுநிறைவான கூட்டத்தொடர் 1984 டிசெம்பர் 21 ஆந் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, பேராளர் குழுக்களின் வேலை முடிவடைந்துவிட்டது என்று நான் அக்குழுக்களுக்குத் தெரிவித்தேன். மாநாடு ஈடுபட்டிருந்த கருமம் தொடர்பான கடின உழைப்பு, ஆழ்ந்த ஆராய்வு ஆகியவை அனைத்தும் குறைந்தபட்சம் நாட்டில் ஓரளவு அமைதியும், ஐக்கியமும், உறுதிநிலைப் பாடும் ஏற்படுவதற்கு உதவும் என்று நான் நம்பிக்கை கொண்டிருந்தேன்.

மாநாட்டுக்கு நான் இந்த அறிவிப்பைச் செய்தபோது கூட்டத்தொடருக்குச் சமூகமளித்திருந்த எல்லாப் பேராளர் குழுக்களின் தலைவர்களும் இது பற்றிய தகவல்களைப் பெற்று, எனது முடிவுக்கு உடன்பட்டனர். நான் மேற்கொண்ட நடவடிக்கை பற்றி அவர்கள் எவருமே மறுப்புத் தெரிவிக்கவில்லை.

விடயங்கள், தொழிற்பாடுகள் என்பனவற்றைப் பன்முகப்படுத்தல் தொடர் பாகக் கிடைக்கக்கூடிய சம்பந்தப்பட்ட பொருள் அம்சங்கள் பேராளர் குழுக்களுக்கு வழங்கப்பட்டன. அவர்களுடைய கருத்துக்களை இயலுமான அளவுக்கு, சீக்கிரமாக எழுத்தில் எனக்கு அறியத்தரும்படி அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறுதியாக நோக்குமிடத்து, அரசாங்கம் முடிவு ஒன்றைச் செய்து, பாராளு மன்றத்தில் அவசியமான சட்டவாக்கத்தை புகுத்த வேண்டியதாக இருக்கும். (சிலோன் டெயிலி நியூஸ். 1984 டிசெம்பர் 22 ஆந் தேதி—இவண் முன்வைக்கப்பட்டுள்ளது.)

பிரேரணைகள் அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத் தினால் பரிசீலனை செய்யப்படவேண்டியிருக்கும் என்றும், உயர் நீதிமன்றமோ நானோ முடிவு செய்தவாறு, மக்கள் தீர்ப்பு ஒன்றையோ ஒரு பொதுத்தேர்தலையோ இப் பிரேரணைகள் பற்றி நடத்துவது சில வேளை அவசியமாகவும் இருக்கலாம் என்றும் நான் மேலும் கூறினேன்.

கூட்டத்தொடரின் இறுதியில் மாநாட்டுப் பேச்சாளரும் தேசிய பந்தோபஸ்து அமைச்சருமான திரு. லலித் அத்துலத்முதலி பத்திரிகைகளுக்குப் பின்வரும் அறிக்கையை விடுத்தார் : "மாநாடு முடிவடைந்தது என்பது, கட்சிகள் பேச்சு வார்த்தைகளை நிறுத்திக்கொள்ளும் என்ற பொருளைத் தராது . . . . . . தனிப்பட்ட முறையான பேச்சுப் பரிவர்த்தனைகளும் பொதுக் கலந்துரையாடல்களும் தொடர்ந்து நடைபெறும்." (சிலோன் டெய்லி நியூஸ். 1984 டிசெம்பர் 22 ஆந் தேதி—இவண் முன்வைக்கப்பட்டுள்ளது.)

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (த. ஐ. வி. மு.) தலைவர்களையும் ஏனைய பேராளர் குழுக்களின் சில தலைவர்களையும் 1985 சனவரியில் மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு நாம் சம்மதித்து, இந்த நோக்கத்திற்காகப் பல நாட்களை ஒதுக்கி வைத்திருந்தேன்.

இதனிடையில், 1984 டிசெம்பர் 19 ஆந் தேதி புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனைத்துக் கட்சி மாநாட்டுப் பிரேரணைகளைக் கலந்துரையாடலுக்காக நான் முன்வைத்தேன். இவை, டிசெம்பர் 26 ஆந் தேதி புதன்கிழமையன்று கலந்துரையாடலுக்காகப் பின்போடப்பட்டன. டிசெம்பர் 19 ஆந் தேதி காலையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அப் பிரேரணைகள் முன் வைக்கப்பட்டமையால், அமைச்சரவை உறுப்பினர்கள் அவை பற்றி ஆராய்வதற்கு காலம் போதுமானதாக இருக்கவில்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

டிசெம்பர் 22 ஆந் தேதி சனிக்கிழமை பிற்பகலில் புலத்சிங்கள தேர்தற்றொகுதி யிலே பொதுக் கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்திய போது, இப்பிரேரணைகளைப் பற்றி பொதுமக்களுக்கு விளக்கிக் கூறியதுடன், அவை இப்பொழுது ஆராய்வுக்காக முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் நான் கூறினேன். (1984 டிசெம்பர் 23 ஆந் தேதி. சண்டே ஒப்சேர்வர்—முன்வைக்கப்பட்டுள்ளது.)

எனவே, டிசெம்பர் 23 ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை "வீக்எண்ட்" பத்திரிகையிலும், டிசெம்பர் 24 ஆந் தேதி திங்கட்கிழமை "சிலோன் டெய்லி நியூஸ்" பத்திரிகையிலும் வெளிவந்த த. ஐ. வி. மு. தலைவரான திரு. அ. அமிர்த லிங்கத்தின் அறிக்கையில், இப் பிரேரணைகள் தமிழ் மக்களால் முற்றாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவையல்ல என்று குறிப்பிட்டிருந்ததை வாசித்து, நான் ஆச்சரியமடைந்தேன். (1984 டிசெம்பர் 23 ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை "வீக்எண்ட்", 1984 டிசெம்பர் 24 ஆந் தேதி "சிலோன் டெய்லி நியூஸ்"—இவண் முன்வைக்கப்பட்டுள்ளன.)



எனவே, பிரேரணைகளைப் பற்றி மேலும் கலந்துரையாடுவதால் பயன் எதுவுமில்லை என்று த. ஐ. வி. மு. கூறியுள்ளதால், அவை பற்றிக் கலந்துரையாடு வதாலோ அவை பற்றி ஒரு முடிவைச் செய்வதாலோ எப்பிரயோசனமும் ஏற்படாது என்றும், அதனால் அரசாங்கம் இப் பிரேரணைகளை அமுலாக்காது என்றும் 1984 டிசெம்பர் 26 ஆந் தேதி புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (1984 டிசெம்பர் 27 ஆந் தேதி வியாழக்கிழமை சிலோன் டெய்லி நியூஸ்—இவண் முன்வைக்கப்பட்டுள்ளது.)

ஸ்ரீ ல. சு. க. உட்பட, 1983 டிசெம்பர் மாதம் அனைத்துக் கட்சி மாநாட்டுக்குச் சமூகமளிக்குமாறு அழைக்கப்பட்ட கட்சிகளின் வேண்டுகோளின் பேரிலேயே த. ஐ. வி. முன்னணியை மாநாட்டிற் பங்குபற்றுமாறு நான் அழைத்தேன். எனினும், அதனையடுத்து சீக்கிரமாக ஸ்ரீ ல. சு. க. மாநாட்டை விட்டு வெளியேறியது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே வெற்றிடங்களுக்கும் மாவட்ட சபைகளுக்கும் அரசாங்கம் தேர்தல்களை நடத்துவதற்கு முன்வந்துள்ளது. அங்குள்ள மக்கள் ஐக்கிய இலங்கையை ஏற்றுக்கொள்வார்கள் என்பதால், அங்குள்ள வாக்காளர்களின் கஷ்டங்களைப் பற்றி அவர்களுடன் பேசுவதும், அரசியல், பொருளாதார, சமுதாயத் துறைகளிலுள்ள குறைபாடுகளுக்கு நிவாரணந் தேடுவதும் சாத்தியமாகவிருக்கும்.

பயங்கரவாதம் பற்றி 1984 பெப்ருவரி 23 ஆந் தேதி பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையின் போது, "இப்பொழுது கூடியுள்ள அனைத்துக் கட்சி மாநாடு அங்கு பிரதிநிதித்துவம் பெற்றுள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்றாகக் கூடி, பதற்ற நிலையை நீக்குவதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான வழிவகைகள் பற்றி அமைதியான முறையில் கலந்துரையாடுவதற்கு ஒரு வாய்ப்பை வழங்குகின்றது" என்று நான் கூறினேன்.

பயங்கரவாதிகளின் இயக்கம் உடன்பாட்டுக்கு வருவதைக் கடினமாக்கியுள்ள தாக நான் உணருகின்றேன். அவர்கள் ஒரு தீர்வினை விரும்புகிறார்களா என்பது பற்றி எனக்கு ஐயப்பாடுண்டு. ஒரு தீர்வு ஏற்பட்டால் பயங்கரவாதம் அழிந்துவிடும் என்று சிலர் நினைக்கிறார்கள். பயங்கரவாதம் முதலாவதாக அழிக்கப்பட்டாலன்றி எந்த ஒரு தீர்வும் ஏற்படுவது சாத்தியமில்லை என்று ஏனையோர் நினைக்கிறார்கள்.

இவற்றுள் கடைசியானதே சரியானது என்று நான் கருதுகின்றேன். 1983 யூலை தொடக்கம் 1985 சனவரி 15 ஆந் தேதி ஈறாக கொலையுண்ணப்பட்ட ஆயுதப்படையினரதும், பொலிசுப் படையினரதும் எண்ணிக்கை 139 ஆகும் ; குடிமக்களின் எண்ணிக்கையோ 339 ஆகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எந்த நோக்கத்திற்காக இந்த மனிதக் கொலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன ?

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழர்களின் உரிமைகளைப் பேணிக்காப்பதற்காகத் தனிநாடு அல்லது ஈழம் கோரும் அரசியல் இயக்கத்தின் படைப் பிரிவினராக இயங்கிய பயங்கரவாதிகள், பின்னர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குக் கங்கணங்கட்டியுள்ள கிளர்ச்சிக்காரராகத் தங்களை வெளிப்படுத்திக் கொண்டனர். இப்பொழுது அவர்களுடைய படைக்கலச் சாலையிற் கண்டுபிடிக்கப்பட்ட பல்வகைப் படைக்கலங்களிலிருந்து, அவர்கள் போர் புரிவதற்குத் தயாராகவும் தளபாடங்களைச் சேகரித்து வைத்திருப்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதும், வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமன்றி நாடெங்கணுமே சனநாயக முறையில் முறையாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராக அவர்கள் போரிட்டு வருகிறார்கள் என்பதும் தெளிவாகின்றது.

இலங்கையிலே செயற்படும் பயங்கரவாதிகள் இந்தியாவில் அமைந்துள்ள பயிற்சி முகாம்களில் பயிற்சிபெற்று வருகிறார்கள் என்பதற்குச் சான்றுண்டு என்பது பற்றி இலங்கை அரசாங்கம் பல தடவைகளில் இந்திய அரசாங்கத்திற்கு முறைப்பாடுகள் செய்துள்ளது. அன்றியும், இந்த இயக்கத்தின் தலைவர்கள் இந்தியாவில் வாழ்ந்து, ஆங்கே சந்தித்து, சட்டவிரோதமான இந் நடவடிக்கைகளை இந்தியாவிலே செய்து வருகிறார்கள் என்றும் நாம் முறைப்பாடு செய்துள்ளோம்.

இப்பொழுது அரசாங்கம் மட்டுமன்றி, இலங்கையிலுள்ள அனைத்து அரசியற் கட்சிகளும் தலைவர்களும் இந்தக் கருத்துடன் உடன்பாடுடையவர்களாக இருக்கிறார்கள்.

பயங்கரவாதிகள் இந்தியாவிலுள்ள பயிற்சி முகாம்களிலே பயிற்சி பெறுகிறார்கள் என்பதையும், அவர்கள் அங்கிருந்து செயற்படுகிறார்கள் என்பதையும், இலங்கைக்கு ஆயுதங்களுடன் கடலைக் கடந்து வருகிறார்கள் என்பதையும் இந்திய அரசாங்கம் மறுத்துள்ளது. இந்திய மண்ணிலிருந்து பயங்கரவாதிகள் இலங்கைக்கு ஊடுருவல் செய்வதைத் தடுப்பதற்காக கூட்டுக் காவல் வலயம் ஒன்றை நிறுவுவதற்கு நாம் யோசனை கூறியுள்ளோம். இந்தக் காவல் வலயம் இலங்கையிலிருந்து அகதிகள் இந்தியாவுக்குச் செல்வதையும் தடுக்கக்கூடியதாக இருக்கமுடியும். இதற்கு இந்தியா ஏன் ஆட்சேபனை செய்ய வேண்டும் ?

பயங்கரவாதிகள் தாக்கிவிட்டு ஓடி ஒளியும் உபாயங்கள் விரைவில் மாற்றியமைக்கப்படவிருப்பதாக வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. குறைந்த பட்சம் பயங்கரவாதிகளுள் மூன்று பிரிவினரேனும் ஐக்கியப்பட்டு, ஒரு பொதுவான இராணுவப் போர் முறைத் தந்திரத்தைப் பின்பற்றுவதற்குச் சம்மதித்துள்ளனர். இதன் மூலம், அவர்களுக்குப் போதுமான அளவில் பயிற்சிபெற்ற ஆட்களும் ஆயுதங்களும் கிடைத்தவுடன் , அவர்கள் இலங்கை இராணுவத்துடன் நேருக்கு நேராகப் போர் புரியக்கூடியவர்களாக இருப்பர்.



இறுதியானதும், ஒரு தீர்க்கமான போர் என்று அவர்கள் நம்புவதுமான ஒரு போராட்டத்திற்கான ஆயத்தங்கள் இப்பொழுது செய்யப்பட்டு வருகின்றன.

ஒரு பொதுவான செயற்றிட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழ்ப் பயங்கரவாதிகள் பிரிவினரை ஒன்றுபடுத்துவதற்கான முயற்சிகளுக்கு, தென்னிந்தியாவில் அதிகார நிலைகளிலுள்ளோருட் சிலர் ஊக்கமுள்ள பொறுப்பு வகிக்கிறார்கள் என்பதற்கு ஆவணச் சான்று இருக்கின்றது.

மேலும், இந்திய மத்திய அரசாங்கமும் தமிழ்நாட்டு மாநில அரசாங்கமும் இப்பொழுது அவற்றின் நல்வாழ்த்துக்களைத் தங்களுக்கு நல்கிக் கொண்டிருப்பதாக பயங்கரவாதத் தலைவர்கள் கூறியுள்ளனர். (தமிழ் நாட்டில் 1984 யூன் 28 ஆந் தேதி நடைபெற்ற ஈ. பி. ஆர். எல். எப். பிரிவினரின் முதலாவது பேரவையை நோக்குக.)

இப்பிரிவுகளுக்கும் உலகப் பெரும் பயங்கரவாத நிறுவனங்களுக்குமிடையே தொடர்புகள் இருக்கின்றன என்பதற்கும் சான்றுண்டு. இந் நிறுவனங்கள் பயிற்சியளிப்பதிலும், ஆயுதங்களைப் பரிவர்த்தனை செய்வதிலும், தாபன ரீதியில் உதவி வழங்குவதிலும், புகலிடம் கொடுப்பதிலும் ஒத்துழைப்பை நல்குகின்றன. தனியாதிக்கவாதிகளின் அரசாங்கங்களுடைய துணையுடன், சர்வதேச பயங்கரவாத நிறுவனங்கள் உலகின் சுதந்திர நாடுகளுக்கு எதிராகத் தங்களுடைய வன்செயல்களை முடுக்கிவிடுகின்றன. பயங்கரவாதிகளின் செயன்முறை மேன்மேலும் நவீன முறைக்குரியதாகவும் ஒன்றிலொன்று சார்ந்திருப்பதாகவும் அமையும்போது, அவர்கள் போராடுவதற்காகக் கூறும் காரணங்கள் மங்கிவிடும் போக்குடையனவாகின்றன.

நாம் அனைவரும் சர்வதேச பயங்கரவாதத்தினாலே பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் அனைவரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அதனால் அச்சுறுத்தப்பட்டுள்ளோம். சனநாயக நாடுகளிலுள்ள தலைவர்களும் பிரசைகளும் கடத்திச் செல்லப்படுவதால் அல்லது கொலை செய்யப்படுவதால் நாம் நேரடியாக அச்சுறுத்தப்படுகிறோம். சர்வதேச பயங்கரவாதத்தின் விளைவுகள் மிகத் தீங்கானவை என்பதால் நாம் மறைமுகமாக அச்சுறுத்தப்படுகிறோம். ஏனெனில் இந்த அச்சுறுத்தல் எமது வாழ்க்கை முறையைப் பாதிப்பதொன்றாகும். சனநாயகத்தின் உயிர்க்குருதி தாக்கப்படுகின்றது; பாராளுமன்ற நடைமுறை, கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் என்பன பாதிக்கப்படுகின்றன. வியாபார சுதந்திரம், போக்குவரத்து சுதந்திரம் ஆகியவை பகிஷ்கரிப்பு, அச்சுறுத்திப் பணம் பறித்தல், எதிர்பாராத தாக்குதல் ஏற்படும் எனும் ஓயாத அச்சம் என்பவற்றால் பாதிப்படைகின்றன.

நமது நாட்டின் அபிவிருத்திக்கு, கல்விக்கு, ஆராய்ச்சிக்கு, சுகாதாரத்திற்கு, பொதுநலனுக்குத் தேவையான ஏராளமான வளவருவாய்களை, நாடெங்கணுமுள்ள குடிமக்களின் மேலான பாதுகாப்புக்காகச் செலவிட வேண்டியுள்ளது. விமானப் போக்குவரத்து, அரசாங்கக் கட்டடங்கள், வழிபாட்டுத் தலங்கள், தூதரகங்கள், சர்வதேச நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள், பாடசாலைகள், அஞ்சல், போக்குவரத்து ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. இவை யாவும் சர்வதேச பயங்கரவாதிகளுக்கு எதிராக எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்

www.tamilarangam.net



கேயாம். ஆனல், தனி மனிதனின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வேளையில், பயங்கரவாதத்திற்கு எதிராக பாதுகாப்பளிப்பது மிகவும் கடினமாகும். சனநாயகம் கட்டியெழுப்பப்பட்டுள்ள நமது நம்பிக்கைகளைத் தானே விட்டுக்கொடுத்து ஒத்து மேவல் செய்யும் காலம் விரைவில் ஏற்படலாம். இவ்வாருன ஒரு நிலைமையை உருவாக்குவதன் மூலம் சர்வதேச பயங்கரவாதம் சனநாயக சமூகங்களின் தார்மீக பலத்திற்குத் தீங்கிழைப்பதுடன் அறைகூவல் விடுக்கவும் செய்கின்றது.

இலங்கையின் எல்லைகளாக பருத்தித்துறையும் தெவிநுவரவும் வடக்கிலும் தெற்கிலும், மட்டக்களப்பும் கொழும்பும் கிழக்கிலும் மேற்கிலும் முறையே அமைந் துள்ளன. பயங்கரவாதிகள் தமிழீழம் என்று தங்களால் அழைக்கப்படும் அரசின் எல்லைகளை அடையும்வரை இலங்கையின் பகுதிகளில் ஊடுருவல் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டு இருக்கிருர்கள். எல்லைகளை நாம் சென்றடையாவிட்டால், அந்த எல்லைகள் எமக்குக் குறுகிவிடும். அவர்கள் வெற்றிபெறுவதற்கு முன்னர் நாம் செயற்படுவதற்கு எண்ணியுள்ளோம்.

பயங்கரவாதத்தை எதிர்த்து நாம் போரிட்டு, எமது முழு சத்தியையும் கொண்டு அதனைத் தோற்கடிக்க வேண்டும். இதனைச் செய்வதற்காக அபிவிருத்திக்கும், சமுதாய, பொருளாதார பொது நலத்திட்டங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலே நாம் நம்மை ஆயத்தமாக்கிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அவ்வாறு செய்வதற்கு நாம் ஒற்றுமைப்பட்டு முடிவு செய்வோம். இக்கருமத்தை மேற்கொள் வதற்காக நாம் ஒரே நாட்டினமாகவும் ஒரே மக்களாகவும் ஒன்று கூடுவோம்.

நமது நாட்டின் இறைமையுடைய சட்டப் பேரவையாகவுள்ள இந்தப் பாராளுமன்றத்தின் மேலாண்மை பற்றிய எனது ஒப்படையை உறுதிப்படுத்திக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த நாட்டின் அமைதியானதும் அரசியலமைப்பு சார்ந்ததுமான எதிர்காலத் தின் இறுதியான நடுநிலைத் தீர்ப்பாளர் மக்களும், எல்லா தேசிய இனங்களையும் சமயங்களையும் சேர்ந்த ஆணுகவோ பெண்ணுகவோ, செல்வராகவோ வறியவரா கவோ இருக்கின்றவர்களான வாக்காளர்களும், இந்த மேதகு பேரவையில் அமர்ந்துள்ள அவர்களுடைய பிரதிநிதிகளுமே ஆவர் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். வேறு எவராலும் தனிப்பட்ட முறையிலோ கூட்டாகச் சேர்ந்தோ இந்த இடத்தை அபகரிக்க முடியாது அல்லது அவர்கள் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படவும் மாட்டார். அவர்கள் பகிரங்கமாகவோ தனிப்பட்ட முறையிலோ வாதிடலாம். பேசவோ எழுதவோ செய்யலாம். ஒரு சனநாயக நாட்டில் அரசாங்கப் பிரேரணைகளுக்கு மாருக சட்டமுறையான எல்லா எதிர்ப்பு முறைகளையும் மேற்கொள்ளலாம். அவ்வளவே செய்யலாமன்றி, அதற்கு மேற் செய்ய முடியாது. நானும் எனது அரசாங்கத்தின் உறுப்பினர்களும், நான் நிச்சயமாக நம்புகிறவாறு இந்தப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒவ்வொரு வருமே இந்தக் கருத்தை ஆதரிக்கிருர்கள்.

## *1986 பெப்புருவரி 20 ஆம் தேதி சனுதிபதி அவர்கள் பாராளுமன்றத்திற்கு ஆற்றிய உரையின் பிரித்தெடுப்பு*

### 1984 ஆம் ஆண்டு அனைத்துக் கட்சி மாநாட்டுக்குப் பின்னர் புதுடில்லி யிலும் 1985 யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் திம்புவிலும் (பூட்டான்) அரசியல் தீர்வு ஒன்றினைப் பெறுதற்காகச் செய்த பிரயத்தங்கள்

### புதுடில்லி (1985, யூன்)

பேச்சுக்கள் முறிவடைந்த போதிலும், இலங்கை அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகளைக் காண்பதற்கான தனது முயற்சிகளை நிறுத்திக் கொள்ளவில்லை. இம்முயற்சிகளுள் முக்கியமானதொன்று, கலாநிதி எச். டபிள்யூ. ஜயவர்தனவின் தலைமையில் சட்டவாணர்களையும், வழக்குரைஞர்களையும் கொண்ட ஒரு பேராளர் குழுவை இந்தியாவின் சட்டத்தரணி நாயகம் ஸ்ரீ கே. பராசரன் அவர்களைச் சந்தித்து, இலங்கையின் பொருத்தமான கூறுகளிடம் சட்டவாக்க, நிருவாக அதிகாரங்களைப் பரவலாக்குதலின் சட்டமுறையான, அரசியல் யாப்புச் சார்பான அம்சங்களைப் பற்றி விவாதிப்பதற்காக அனுப்புவதென 1985 யூனில் அரசாங்கம் முடிவு செய்தமையாகும். இலங்கை அரசியல் யாப்பின் 2 ஆம் உறுப்பின்படி அஃது ஓர் ஒற்றையாட்சி அரசு என்பதும், 3 ஆம் உறுப்பின்படி இறைமை மக்களிடம் இருக்கின்றது; அது வேற்றுரித்தாக்கப்பட முடியாதது என்பதுமான உண்மைகளுக்கு உரிய மதிப்பளித்து, சட்டமுறையான, அரசியல் யாப்புச் சார்பான பல்வேறு விடயங்கள் பற்றிய பூரணமான, ஒளிவுமறைவு இல்லாத கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடல்கள், உடன்பாடான முடிவுகள் என்பன பற்றிய பதிவேடு ஒன்று இரண்டு அரசாங்கங்களின் தலைவர்களிடமும் சமர்ப்பிக்கப்பட்டன.

### திம்பு (1985, யூலை—ஆகஸ்ட்)

அரசியல் தீர்வு ஒன்றினைக் காண்பதே இலங்கை அரசாங்கத்தின் முக்கிய கரிசனையாக இருந்தது. பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஒன்றினைக் காண்பதற் கான இந்த ஒப்படைவு காரணமாகவே, எந்தவோர் இறைமையுள்ள அரசும் முன்னெரு போதும் செய்திராத வகையில் இலங்கை அரசு தனது ஏற்புடைய பிரதிநிதிகளை அனுப்பிவைத்து, இந்திய அரசாங்கத்தின் நல்லெண்ணச் செல் வாக்கு வாயிலாகத் தமிழ்க் குழுவினர்களை, பூட்டானிலுள்ள திம்புவில் 8.7.85 தொடங்கி 13.7.85 வரையிலும், 12.8.85 முதல் 17.8.85 ஈருகவும் உள்ள காலப்பகுதியில் இரண்டு மாநாடுகளில் சந்தித்து, தீர்வு ஒன்றினை அடைவதற்கான சாத்தியம் பற்றி ஆராய்வதற்கு முயற்சி செய்தது.

www.tamilarangam.net



எனினும், இலங்கை அரசாங்கம் அவர்கள் முன் வைத்த பிரேரணைகள் எவற்றையும் பற்றிக் கலந்துரையாடுவதில் த. ஐ. வி. முன்னணியோ அன்றி இப்பேச்சுக்களுக்கு சமுகமளித்த குழுக்களோ எந்தவித நாட்டமும் காட்டவில்லை. அவர்கள் அரசாங்கப் பிரேரணைகளை முற்றாக மறுத்து விடுவதாக இறுதியாகக் கூறியதுடன், தங்களாலே "மிகமுக்கியமான கொள்கைகள்" என்று கொள்ளப்பட்ட வற்றுக்கு இசைவாக இலங்கை அரசாங்கம் புதிதாகப் பிரேரணைகளை முன்வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இவை ஈழக் கோரிக்கையை மீள வலியுறுத்துவதைத் தவிர வேறு எதனையும் குறிக்கவில்லை.

ஆறு தமிழ்க் குழுவினர் தாங்கள் ஆராய்ந்து கொண்டிருந்த "நான்கு கொள்கைகள்" பற்றி 1985, யூலை 13 ஆந் தேதி ஓர் அறிக்கை விடுத்தனர். அதற்குப் பதிலிறுக்குமுகமாக, இலங்கைப் பேராளர் குழுவின் தலைவரான கலாநிதி எச். டபிள்யூ. ஜயவர்தன தமிழ்க் குழுக்களாற் குறிப்பிடப்பட்ட நான்கு கொள்கைகள் பற்றிய அறிக்கையொன்றை 1985, ஆகஸ்ட் 12 ஆந் தேதி விடுத்தார். இவ்வறிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு ஆ).

தமிழர்களைத் தனித்துவமான ஒரு தேசிய இனமாக அங்கீகரித்தல், தனியான ஒரு தாயகம், தமிழர்களுக்கான சுயநிருணய உரிமை, வடக்கு, கிழக்கு மாகாணங் களை இணைத்தல் ஆகியவை தனியான ஓர் அரசுக் கோரிக்கையை மீளவலியுறுத்த லாகும் என்பதால், இவை இலங்கை அரசாங்கம் கலந்தாராய்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்குமான விடயமாக இருக்க முடியாது என்று அவர் அறிக்கையிற் பதிலிறுத்தார்.

மேலும், இலங்கைப் பேராளர் குழு ஆகஸ்ட் 16 ஆந் தேதியன்று, மக்கள் பங்குபற்றும் அரசாங்கம் முறைமையொன்றின் உப தேசியக் கூறுகளின் கட்ட மைப்பு ஒன்று பற்றிய விளக்கத்தையும் சமர்ப்பித்தது. கலந்தாராய்வதற்கும் உடன்படுவதற்குமான அமிசங்கள் இவையிவையென அந்த விளக்கம் சுட்டிக் காட்டிய போதிலும் தமிழ்க் குழுக்கள் இதனையும் கவனத்திற்கெடுக்கவில்லை. த. ஐ. வி. முன்னணியினர் ஏனைய குழுக்களோடு சேர்ந்து இலங்கை அரசாங்கத்தால் யுத்தநிறுத்தம் மீறப்பட்டது எனும் சாட்டின்கீழ் மாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்ததுடன், கலந்துரையாடலிற் பங்கு கொள்வதற்கும் மறுத்தனர். இலங்கைப் பேராளர் குழுவானது பேச்சுக்கள் முடிவடைந்த போதிலும், மாநாட்டுக் கூட்டத் திற்கு தமிழ்க் குழுக்களைத் திரும்பவும் கொண்டுவருவதன் மூலம் அமைதியான தீர்வு ஒன்றினை அடைவதற்கான முயற்சிகளைப் புதுப்பிக்க வேண்டுமெனப் பல நாட்களாகத் திம்புவில் தங்கியிருந்தது.

## புதுடில்லி (1985, ஆகஸ்ட்)

இதன் பின்னர், இலங்கைப் பேராளர் குழுவின் தலைவரான கலாநிதி எச். டபிள்யூ. ஜயவர்தன இந்தியப் பிரதம மந்திரியைச் சந்திப்பதற்காகப் புதுடில்லிக் குச் சென்றபோது, பேராளர் குழுவிலுள்ள ஏனையோர் இலங்கைக்குத் திரும்பி



வருவதற்காகப் பம்பாய்க்குச் சென்றனர். பிரதம மந்திரியுடன் கலந்துரையாடிய பின்னர், அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கைப் பேராளர் குழுவின் தலைவர் தமது பேராளர் குழுவிலுள்ள ஏனையோரைப் பம்பாயிலிருந்து வருமாறு அழைத்து, ஆகஸ்ட் 30 ஆந் தேதிவரையில் புதுடில்லியிலே இந்திய அதிகாரி களுடன் மீண்டும் கலந்துரையாடல்களை நடத்தினர். அவ்வமயம், உடன்பாடும் புரிந்துணர்வுகளும் பற்றிய வரைவு நியதிகள் இலங்கைப் பேராளர் குழுவின் செயலாளராலும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பிரதிச் செயலாளரான திரு. ரஞ்சன் மத்தாயினாலும் கையொப்பமிடப்பட்டன. இலங்கைப் பேராளர் குழுவின் தலைவர், பின்னர் இந்தியப் பிரதம மந்திரியை மீண்டும் ஒருமுறை சந்தித்துத் தங்களுடைய கலந்துரையாடலின் முடிவுகளை அவருக்கு அறிவித்தார்.

இப்பேச்சுக்களின் முடிவில், இந்திய வெளிவிவகார அமைச்சு, கலாநிதி எச். டபிள்யூ. ஜயவர்தனவின் புதுடில்லி விஜயம் பற்றிப் பின்வரும் பத்திரிகை அறிக்கையை 1985, ஆகஸ்ட் 31 ஆந் தேதியன்று வெளியிட்டது :

### இந்திய வெளிவிவகார அமைச்சு 31.8.85இல் விடுத்த பத்திரிகை அறிக்கை

"இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் திம்புப் பேச்சுக்களிற் கலந்துகொண்ட இலங்கைப் பேராளர் குழுவுக்குத் தலைவரான கலாநிதி எச். டபிள்யூ. ஜயவர்தன கொழும்புக்குத் திரும்பும் வழியில் புதுடில்லியில் தங்கினர். கலாநிதி ஜயவர்தன புதுடில்லியில் ஆகஸ்ட் 23 ஆந் தேதியிலிருந்து ஆகஸ்ட் 31 ஆந் தேதிவரையில் இருந்தார். அவர் தங்கியிருந்தபோது இரண்டு தடவைகள் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசினர்.

கலாநிதி ஜயவர்தன வெளிவிவகாரச் செயலாளரான திரு. ரொமேஷ் பண்டாரியுடன் விவரமான, உருப்படியான கலந்தாராய்வு களை மேற்கொண்டார்.

முக்கியமானவையும் சம்பந்தமுடையவையுமான எல்லா விடயங் களையும் உள்ளடக்கிய முழுமையான ஒரு பத்திரம் வரையப்பட் டுள்ளது. இந்த விவரமான வரைவு, சம்பந்தப்பட்ட கட்சிகளாலே பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்பாடு பற்றிய பேச்சு வார்த்தைகளுக்கான அடிப்படையாக உதவமுடியும்".

பேராளர் குழு இலங்கைக்குத் திரும்பிய பின்னர், வரைவு உடன்பாட்டிலுள்ள சில விடயங்களைத் தெளிவுபடுத்துவது அவசியமெனக் காணப்பட்டது. எனவே, இலங்கைப் பேராளர்குழுவின் மூன்று உறுப்பினர்கள் இலங்கை உயர் ஸ்தானிகளு டன் சேர்ந்து, செப்டம்பர் 10 ஆந் தேதி முதல் 13 ஆந் தேதிவரையில்

www.tamilarangam.net



புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சின் சிரேட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தினர். இப்பேச்சுக்களின் முடிவில் இந்திய வெளிவிவகார அமைச்சு பின்வரும் செய்தி அறிக்கையை வெளியிட்டது :

### இந்திய வெளிவிவகார அமைச்சினால் 13 . 9 . 85 இல் விடுக்கப்பட்ட செய்தி அறிக்கை

" இலங்கையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவும் இலங்கை உயர் ஸ்தானிகர்களும் வெளிவிவகார அமைச்சின் சிரேட்ட அதிகாரிகளுடன் செப்டம்பர் 10 ஆந் தேதியிலிருந்து 13 ஆந் தேதி வரையில் செறிவான கலந்தாராய்வுகளை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் வெளிவிகாரச்செயலாளரையும் சந்தித்துப் பேசினர்.

புதுடில்லிக்குக் கலாநிதி எச்.டபிள்யு. ஜயவர்தன, முன்னர் விஜயஞ் செய்த போது வரையப்பட்ட பத்திரத்திற் காணப்பட்ட சில விடயங்கள் பற்றி இலங்கைப் பேராளர்குழுவினர் ஓரளவு விளக்கம் அளித்தனர். மேலும், இந்தப் பத்திரத்தில் அடங்கியுள்ள பிரேரணைகளுட் சில எவ்வாறு நடைமுறையிற் செயற்படும் என்பது பற்றிச் சில உண்மைகளையும் புள்ளி விவரங்களையும் கொடுத்தனர். கலாநிதி எச். டபிள்யு. ஜயவர்தனவின் விஜயத்தின் போது வரையப்பட்ட இப்பத்திரம், சம்பந்தப்பட்ட கட்சிகளாலே பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்பாடு பற்றிய பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாக உதவுவதற்கேயாம் என்பது நினைவுகூரத் தக்கது. "

உடன்பாடும் புரிந்துணர்வும் பற்றிய வரைவு நியதிகளின் அடிப்படையிலேயே பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வினைக் காணும் பொருட்டு எதிர்காலத்தில் நடாத்தப்படும் கலந்தாராய்வுகள் அமையும் எனும் முழுமையான எதிர்பார்ப்புடன் இலங்கைப் பேராளர் குழு இலங்கைக்குத் திரும்பியது. திம்புவிலும் புதுடில்லியிலும் அடையப் பெற்ற உடன்பாடு எந்தவோர் எதிர்காலக் கலந்தாராய்வுக்கும் அடிப்படையாக அமைய வேண்டியதொன்ருகும். அவ்வாருன கலந்தாராய்விலே முன்னர் குறிப்பிடப்பட்ட நான்கு கொள்கைகளும் எந்த உருவிலும் எவ்வாற்ருனும் மீண்டும் ஆராயப்படுவதற்கில்லை. இதுவே இந்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கம் ஆகிய இரண்டுக்குமிடையிலான புரிந்துணர்வின் அடிப்படையாக இருந்தது.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமை பற்றிய விடயம், இக்குழுக்களுடன் கலந்தாராய்வு செய்ய வேண்டிய தொன்றன்று. அது, சம்பந்தப்பட்ட ஆட்களுக்கும் இந்திய, இலங்கை அரசாங்கங்களுக்கும் இடையே தீர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

உடன்பாடும் புரிந்துணர்வும் பற்றிய நியதிகள் இந்திய அரசாங்கத்திஞல் தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்பட வேண்டியிருந்தன. ஆயின், இக்குழுக்கள் ஒரு தீர்வினை அடைவதில் எவ்வித அக்கறையும் காட்டாமையால், இலங்கைப் பேராளர்குழுவினரதும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளதும்



அனைத்து முயற்சிகளும் பயனற்றுப்போயின. எனவே, இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வு ஒன்றினைக் காண்பதற்கு எம்முயற்சியும் செய்யவில்லையெனக் கூறுவது சரியானதன்று.

### 1985 டிசெம்பர் 1 ஆந் தேதியிட்ட தஜவிமு பிரேரணைகள்

மூன்று மாதங்களுக்கு மேலாகிய பின்னர், 1985 டிசெம்பர் முதலாந் தேதியன்று இந்தியாவின் பிரதம மந்திரியான ஸ்ரீ ரஜீவ் காந்தியிடம் பரிசீலனை செய்வதற்கான பிரேரணைகளைத் தஜவிமு சமர்ப்பித்தது.

உடன்பாடும் புரிந்துணர்வும் பற்றிய வரைவு நியதிகளைக் கலந்தாராய்வதற்கான ஒரு முயற்சியாக அப்பிரேரணைகள் சிறிதும் அமைந்திருக்கவில்லை. அப்பிரேரணைகள் இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன (பின்னிணைப்பு இ — முன்வைக்கப்பட்டுள்ளது). தஜவிமு கொடுத்த பிரேரணைகளுக்கு முற்ருகப் பதிலிறுக்கும் வகையில் " பிரேரணைகள் மீது அரசாங்கத்தின் இறுதியான அவதானிப்புகள் " 1986 சனவரி 30 ஆந் தேதியன்று புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (பின்னிணைப்பு ஈ — முன்வைக்கப்பட்டுள்ளது).

ஏற்கனவே குறிப்பிடப்பட்டவையும், இந்திய அரசாங்கத்துடன் தயாரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டவையுமான உடன்பாடும் புரிந்துணர்வும் பற்றிய வரைவு நியதிகளுக்கு தஜவிமு தயாரித்த பிரேரணைகள் முற்றிலும் முரண்பட்டவையாக இருக்கின்றன.

1985 ஆகஸ்ட் 30 ஆந் தேதியன்று புதுடில்லியில் கையொப்பமிடப்பட்ட உடன்பாடும் புரிந்துணர்வும் பற்றிய வரைவு நியதிகளின் அடிப்படையிலேயே எதிர்காலக் கலந்தாராய்வுகள் அமைந்திருத்தல் வேண்டும்.

### அமுலாக்குவதற்கான நிபந்தனைகள்

எந்தவோர் உடன்படிக்கையையும் பூரணமாக அமுலாக்குதல், பின்வருவனவற்றுக்கு இணங்குவதைப் பொறுத்த நிபந்தனைக்கு உட்படுவதாக இருக்கும் என்பதும் புரிந்துகொள்ளப்பட்டது.

(1) இலங்கை அரசாங்கத்துடனுன நடப்புத் தகராறில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பையும், குறிப்பாக அரசகரும மொழி, தேசிய மொழிகள், தேசியக் கொடி, தேசிய கீதம் என்பவை சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு, அவற்றின் வலிதாகுந்தன்மையை அங்கீகரிப்பதுடன், தனியான ஈழ அரசை உருவாக்குவதற்கான கோரிக்கையையும் கைவிடுவர்.

(2) வன்செயல்களிலும் சட்டவிரோதமான அல்லது சட்டமுரண்பாடான செயல்களிலும் ஈடுபட்டுள்ள அனைத்துத் தீவிரவாதக் குழுவினரும் ஆட்களும் அவ்வாருன செயல்களைக் கைவிடவும், எதிர்காலத்தில் வன்செயலை வெறுத்து ஒதுக்கவும், வன்செயல்களில் ஈடுபட்டுள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களுடைய ஊழியர்கோப்பினர்களேயும் குழுவினர்களேயும் கலேத்து விடவும், இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள அவர்களுடைய பயிற்சி முகாம்களை மூடிவிடவும் செய்வதுடன், நாட்டில் பொதுவாக அமைதியை யும் சகஜநிலேயையும் மீள ஏற்படுத்துதற்கும் உதவுவர்.

(3) அங்கீகாரம் பெருது படைக்கலங்களேயும் போர்த் தளவாடங்களேயும் தம்வசம் வைத்திருக்கின்ற அனைவரும் அத்தகைய ஆயுதங்களை ஒரு மாதகால அளவிற்குள் இலங்கை அரசாங்கத்திஞல் குறித்துரைக்கப்படும் அதிகாரிகளிடம் கையளிப்பர்.

(4) சகஜநிலேயினை ஏற்படுத்தும் செய்முறையின் ஒரு பகுதியாக, பாதிக்கப் பட்ட பகுதிகளிலே இருந்துவரும் பந்தோபஸ்து தொழிற்பாடுகள் படிப்படியாகக் குறைக்கப்படும்; அவசரகால நிலேயும் நீக்கப்படும்.

(5) 2 ஆம் 3 ஆம் பந்திகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவுடன், இலங்கை அரசாங்கம் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும் :—

(அ) விசாரணேகளுக்கு உட்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டோருக்கும், 1983 யூலே தொடங்கி 1985 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் இனக்கலவரங்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக எந்த வொரு நீதிமன்றத்திலும் நடைபெற்றுவரும் வழக்குகளிற் சம்பந்தப் பட்டோருக்கும் எதிரான வழக்குகள் வாபஸ் பெறப்படும்.

(ஆ) அவ்வாருன குற்றங்களுக்காகத் தண்டனேக்குள்ளானவர்கள் மன்னிப்பு வழங்கப்பட்டு, விடுவிக்கப்படுவர்.

(இ) அவ்வாருன எந்தவொரு குற்றம் தொடர்பாகவும் புதிதாக வழக்கு கள் தொடரப்படமாட்டா.

(6) பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிவில் நிருவாகத்தையும் சட்ட அமுலாக்கலே யும் உரிய ஒழுங்கான முறையில் நடாத்துவதற்குத் தேவையான நிலேமைகளே உருவாக்குவதற்கு, நடப்பிலுள்ள தகராறில் ஈடுபட்டுள்ள அனேவரும் இடையூருக இருக்கமாட்டார்.

(7) இலங்கையிலோ அன்றி வெளிநாடுகளிலோ அகதிகளாகவுள்ள எல்லோ ரும் அவர்களுடைய சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிவருவதற்கும் மீளக்குடியமர்வதற்கும், அவர்கள் புனர்வாழ்வு பெறுவதற்கும் அவசிய மான நிலேமைகளே உருவாக்குவதற்கு, நடப்பிலுள்ள தகராறில் ஈடுபட் டுள்ள அனேவரும் இடையூருக இருக்கமாட்டார்.

(8) இந்த உடன்படிக்கை அமுலுக்கு வருவதுடன், இலங்கை அரசாங்கம் இலங்கையில் எல்லா வகையான பயங்கரவாதத்தையும் தீவிரவாதச் செயற்பாடுகளேயும் ஒழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளே மேற் கொள்ளும் விதத்தில் செயற்படும்.

(9) மேலுள்ள 2 ஆம் 3 ஆம் பந்திகளிற் கூறப்பட்டுள்ள நிபந்தனேகள் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுகின்றதை உறுதிப்படுத்துமுகமாக, அரசாங் கம் பொருத்தமான நிருவாகப் பொறிமுறையை ஏற்படுத்தும்.



## முடிவுரை

இல்விடயம் தொடர்பாக எழுந்துள்ள அரசியற் பிரச்சினேகளுக்கு அரசியல் தீர்வு ஒன்றினேக் காண்பதற்காக நானும் எனது அரசாங்கமும் எங்களால் இயன்றளவு முயன்றுள்ளோம். இப்பிரச்சினேகள் பற்றிக் கலந்துரையாடல்கள் செய்வதற்கான கூட்டங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கு எங்களுக்கு உதவிய இந்திய அரசாங்கங்களுக்கும் அவைகளின் பிரதம மந்திரிகளுக்கும், குறிப்பாகப் பிரதம மந்திரி ரஜீவ் காந்திக்கும் அவர்தம் பிரதிநிதிகளுக்கும் எங்களது நன்றியறிதலே நான் தெரிவிக்க வேண்டும். தீர்வு ஒன்றினேக் காண்பதற்காக சில கொள்கைகளி லிருந்து நாம் விலகிச் செல்ல முடியாது. நாம் இலங்கையின் ஐக்கியத்தைப் பண்டமாற்றுச் செய்யமுடியாது. சனநாயக நிறுவகங்கள், அரசியல் யாப்பு சார்ந்ததும் நிருவாகமுறையானதுமான எந்தவோர் தீர்விலும் மாகாணங்களே இணேக்காதிருத்தல், இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும், அவர் எந்த இனத்தையோ, சமயத்தையோ, சாதியையோ சார்ந்தவராயினும், முழுத் தீவையும் தமது சொந்தத் தாயகமாகக் கொள்வதற்கு அவருக்குள்ள உரிமை, கல்வியிலும் வேலேவாய்ப்பிலும், இன்னும் அரசியல் யாப்பு முறையிலும் அரசியல் முறையிலும் சமுதாய முறையிலும் சமமான உரிமைகளே அனுபவித்தல் ஆகியவை அனேத்துமே மீறமுடியாதவையாகும்.

நாம் மாகாண/மாவட்ட சபைகளே உருவாக்குதற்கான சட்டவாக்கத்தைப் பாராளுமன்றத்தின் முன்வைப்பதற்கு உடன்பட்டுள்ளோம். அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தப்பட்ட உண்மையான நியதிகளே ஏற்பதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்ட தும், மாகாணத்தில் மிகவுயர்ந்த சபையாகவுள்ள ஒவ்வொரு சபைக்குமுரிய பிரதம நிறைவேற்றுநர் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மைக் கட்சியின் தலேவராக இருப்பார் ; அவருடைய அதிகார எல்லேக்குள் அமைச்சர் ஒருவருக்குரிய அதிகாரங்கள் அவரிடம் ஒப்படைக்கப்படும்.

கொழும்பிலும், புதுடில்லியிலும், திம்புவிலும் இக்கலந்தாராய்வுகள் அனேத்தும் நடைபெற்று வந்தபோது, பந்தோபஸ்துப் படையினருக்கும் எல்லா இனங்களேயும் பால்களேயும் சேர்ந்த பொதுமக்களுக்கும் எதிராக இடைவிடாது பயங்கரவாதப் போராட்டம், கொலே, கொள்ளே, கற்பழிப்பு ஆகியவை இடம் பெற்றிருந்தன. உயிரிழப்புக்கள், காயங்கள், அழிவுகள் தொடர்பான மாதாந்த புள்ளி விவரங்கள் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படுகின்றன. எந்தவோர் அரசியல் தீர்வும் பூர்த்தி யாக்கப்பட்டு அமுலாக்கப்படுவதற்கு முன்னர், சட்டவிரோதமான படைக்கலங்கள் ஒப்படைக்கப்படவும், இராணுவப் பயிற்சி முகாம்கள் மூடப்படவும், நாட்டின் சட்டங்களுக்கு எதிரான எல்லா வகையான வன்செயல்களும் கைவிடப்படவும் வேண்டும் எனக் கோருவது ஒரு சனநாயக அரசின் வேற்றுரித்தாக்கப்பட முடியாத உரிமையென நாம் நம்புகிரும்.

அகிம்சை என்பது இலங்கை அரசாங்கத்தினதும் இந்திய சுதந்திரத்திற்கும் அரசியல் யாப்பிற்கும் அடிகோலிய பிதாக்களினதும் ஓர் உறுதியான நம்பிக்கை யாகும். அரசியல் இலக்குகளே அடைவதற்காக வன்செயலேப் பிரயோக்கிப்பது,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவின் அருந்தவப் புதல்வர்களும், சிறப்பாகப் புத்தபெருமானும் மகாத்மா காந்தியடிகளும் போதித்த இலட்சியங்களுக்கு முற்றுக முரண்பட்டதொன்று. இலங்கையிலுள்ள நாம் இவ்விலட்சியங்களைப் பின்பற்றுவதற்கு முயன்றுள்ளோம்.

நாம் வன்செயலோடு சமரசம் செய்துகொள்ள முடியாது. அரசியல் இலக்குகளை அடைவதற்கான ஒரு செயற்றிட்டத்தைத் தொடருவதற்கு எத்தகைய உருவிலான கிளர்ச்சியைப் பயன்படுத்தினுலும், அஃது அகிம்சை முறையானதாகவும், பௌத்தருக்கும் காந்தியவாதிகளுக்குமுரிய சத்தியாகிரிய அல்லது சத்தியாகிரக முறையைப் பின்பற்றுவதாகவும் இருத்தல் வேண்டும். ஓர் அரசியல் உடன்படிக்கையோ அல்லது அஃது இல்லாமையோ இவ்விலட்சியங்களை ஏற்றுக்கொள்வதற்கான அவசியத்தை எந்த வகையிலும் குறைத்துவிட முடியாது.

தமிழ்நாட்டின் ஆள்புலத்தில் வாழ்கின்ற இலங்கைப் பயங்கரவாதிகளின் நிலைமையைக் கையாள்வதில் அந்நாடு தான் விரும்பியவாறு செயற்படுவதற்கு அனுமதிக்கப்படாவிட்டால், அந்நாடு இந்தியாவின் ஐக்கியத்துக்கு ஊறு விளைவிக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

